[1970 மார்ச் 18

இடைநிலை ஆசிரியர்கள் மாநாடு

* 435 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1969 மார்ச் மாதம் கோவை மாவட்டத்தில் நடந்த இடைநிலை ஆசிரியர்கள் (Secondary Grade Teachers) மாநாட்டின் முடிவை ஒட்டி அரசுக்கு ஏதாவது கோரிக்கைகள் அனுப்பப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அரசு அதன்மேல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே இந்த இடைநிலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய இன்கிரிமெண்ட்டெல்லாம் முதலிலே அதிகமாகக் கொடுத்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின்னால் அந்த இன்கிரிமெண்ட் குறைகின்றது. இந்த 'டிஸ்பேரிட்டி'யைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது எந்த விதத்தில் எப்படி அமைந்திருக்கிறது என்று குறிப்புகள் இல்லை. ஆசிரியர் கோரிக்கைகளை இயக்குநர் அவர்கள், டி.இ.ஓ. மூலம் வாங்கிப் பார்த்ததில், பொதுவாக எல்லா ஆசிரியர்களும் கூறுவதுதான் சொல்லப்படுகிறது. குறைகளில் பெரும்பகுதி, நிதிநிலை அறிக்கையில் இருக்கின்ற வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவ வசதி செய்வது பற்றிக் கேட்டிருந்தார்கள். அவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அத்தகைய இன்க்ரிமெண்ட் பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் திரட்டித் தரப்படும்.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, இடைநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே ஜுனியர் கிரேட் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுதான், எற்கெனவே செகண்டரி கிரேடு படித்துவிட்டு, ஹையர் கிரேட் பதவிகளில் வேலை பார்ப்பவர்களுக்குப் படிப்படியாகக் கொண்டு வரும் நோக்கத்தில் இந்த ஆண்டு 3,000 ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அதற்குப்பிறகு 4,000, 5,000 ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

Arrests of College teachers

* 429 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of persons on the teaching staff of a number of colleges in Madras City have been arrested during the later part of August 1969, and

(*b*) if so, the details thereof?